Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை: ரூ. 1·25

சுடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய வருடம் மாசி மீ 28 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 றஜப் பிறை 11 (12-03-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY ஒளி 90

இடம் மாற்றம்
பக்கட்ட விரும்புகிறீர்களா? உடன் நாடுங்கள்
V. T. & சன்ஸ்
பழைய முகவரி: 11, பிரதான வீதி. யாழ்ப்பாணம்.
புதிய முகவரி: 317, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

கண் பரிசோதிக்க எண்ணுகிறீர்களா?
மூக்குக்கண்ணாடி பெற வேண்டியுள்ளதா? விரையுங்கள்!
V. T. & சன்ஸ்
இல. 317, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(நியூ விக்ரேஸ் அருகாமை)

**சுபநேரம்**

12-03-1987 வியாழக்கிழமை சுபநேரம்: 7-53 முதல் 9-23 வரை ராகுகாலம்: 1-53 முதல் 3-23 வரை இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பிரதோஷ விரதம்

குற்றச்சாட்டு இல்லாது

# காவலில் உள்ளோர் விடுதலை

## எரிபொருள் தடை மறுபரிசீலனை

### அரசு படியிறங்கி வருகின்றதா?

கொழும்பு, மார்ச் 12

* குற்றச்சாட்டு எதுவும் சுமத்தப்படாமல் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் சகலரும் விடுவிக்கப்படுவர். அதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துதல் (இந்த வகையில் 700 பேர் அடங்குவர் என அறியப்படுகிறது.)
* சிறு குற்றச் சாட்டுகளுடன் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 40 வயதுக்கு மேற்பட்ட தமிழர்களையும் விடுவிப்பது.
* வடக்கு மீது விதிக்கப்பட்ட எரிபொருள் தடையை மறுபரிசிலனை செய்வது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. செய்தது

தமிழ்ப் போராளிகளை ஆயுதங்களைத் திருப்பி ஒப்படைக்கத் தூண்டும் சில ஏற்பாடுகள் குறித்து அமைச்சரவை நேற்று முடிவு செய்தது

அரசாங்கத்தின் இந்த முடிவுகள் புதிய சிந்தனையைப் பிரதிபலிப்பதாகவும், தானாகப் படியிறங்கும் தன்மையினதாகவும் அதேவேளை போராளிகளைச் சிக்கவைக்கும் ஏமாற்றுத் தந்திரமாகவும் அமைந்திருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

புதிய சிந்தனைக்கு சர்வதேச நிர்ப்பந்தமும், இந்தியாவின் கடும் போக்கும், மனித உரிமை ஆணைக் குழுக்கூட்டத்தில் ஆர்ஜென்ரீனா கொண்டுவந்துள்ள பிரேரணையும் கூட்டாகக் காரணங்களாக அமையலாம் எனவும் அவர்கள் மேலும் கருத்து வெளியிட்டனர்.

அமைச்சரவையின் நேற்றைய முடிவுகள் வருமாறு:—

## நாவற்குழியில் தொடர்ந்து மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 12

நாவற்குழியில் நான்காவது நாளாக படைகளும் புலிகளும் மோதி வருகின்றனர்.

நேற்றும் அங்குஸ் முகாமிலிருந்து சிப்பாய்கள் மேலும் முன்னேற முயன்றனர் எனினும் விடுதலைப் புலிகள் அவர்களை முன்னேற விடாது கடும் தாக்குதல் நடத்தினர்.

இருதரப்பிலும் சேதக் கட் மோட்டோர்த் தாக்குதல் பலமணி நேரமாக மேற் கொள்ளப்பட்டன

புலிகள் நடத்திய மோட்டோர்த் தாக்குதலினால் சிப்பாய்கள் தரப்பில் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை குண்டு வீச்சு விமானம் ஒன்றும் கிபிவேள் ஒன்றும் இப்பகுதியில் நேற்று வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டன. (உ-10)

## ஹெலிகள் படும்பாடு!

யாழ்ப்பாணம், மார்ச் 12

நாவற்குழி இராணுவ முகாமுக்கு வரும் ஹெலிக் கொப்டர்கள் அங்கு தினமும் வெவ்வேறு இடங்களில் இறங்குவதோடு, இறங்கிய கையோடு உடன் எழுந்து பறந்துவிடுகின்றன. அங்கு தரித்து நிற்பதில்லை.

விடுதலைப் புலிகள் ஹெலிக் கொப்டரை

(4ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலிலிருந்து இறக்கப்பட்ட பொருள்கள்

பலாலி, மார்ச் 12

நேற்று காங்கேசன் துறை முகத்துக்கு வந்த கப்பலில் இருந்து இராணுவத் தளபாடங்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பணப் புழக்கம் பாதிப்பு நிலை நீங்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 12

வடக்கில் பணப்புழக்கத்தில் ஏற்பட்டிருந்த பாதிப்பு நிலை நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விமானப்படை விமானம் மூலம் நேற்று வடக்கிற்கு பண நோட்டுக்கள் கொண்டுவரப்பட்டதை அடுத்தே பாதிப்பு நிலை நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை வங்கியின் வடபகுதி கிளைகளுக்கு என கொழும்பிலிருந்து வாரம்தோறும் தருவிக்கப்படும் பணம் கடந்த மூன்று வாரங்களாகக் கொண்டு வரப்படவில்லை என்பது தெரிந்ததே

நேற்றுப் பணம் கொண்டுவரப்பட்டதை அடுத்து இலங்கை வங்கியின் பணக் கொடுக்கல் வாங்கல் வழமைக்குத் திரும்பியது. (உ-10)

## கூரை இடிந்து 28 மாணவர் பலி!

பீகிங், மார்ச் 12

சீனத் தென்நகரில் உள்ள பாடசாலை ஒன்றின் கூரை இடிந்து விழுந்ததன் காரணமாக 28 மாணவர்கள் உயிரிழந்தனர்.

இது தொடர்பாக பாடசாலையின் தலைமை அதிகாரி, துணை அதிகாரி ஆகியோரைப் பொலிசார் கைது செய்தனர்.

இதுபோன்ற ஒரு சம்பவம் கடந்த மாதம் சிக்கியாங் மாகாணத்தில் இடம்பெற்றது.

# யாழ். நகரை அண்டி ஐந்து பாரிய கப்பல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 12

மண்டைதீவு கடல்பகுதியிலும், குருநகர் கடல் பகுதியிலும் ஐந்து பாரிய கப்பல்கள் நங்கூரமிட்டுள்ளன

ஏற்கனவே இப்பகுதியில் தரித்து நின்ற கப்பல்களைவிட மேலதிகமாக இரண்டு கப்பல்கள் இப்பகுதிக்கு நேற்று வந்து சேர்ந்தன.

கப்பலில் வந்த ஏராளமான பொருட்கள் பிளாஸ்ரிக் படகுகளிலும், பீரங்கிப் படகுகளிலும் மண்டைதீவு, கோட்டை முகாம்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன

இதேவேளை பல பீரங்கிப்படகுகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் சிப்பாய்கள் தூரதிருஷ்டி கண்ணாடிகள் மூலம் கரையோரப் பகுதியில் முக்கிய இடங்களை அவதானித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

கோட்டை முகாமில் இருந்து தரைமார்க்கமாக வெளியேறமுடியாத சிப்பாய்கள் கடல் மார்க்கமாக நகருக்குள் நுழைய எத்தனிக்கலாம் என ஊகம் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை மண்டைதீவு, குருநகர் கடல் பகுதிகளில் ஏராளமான பீரங்கிப் படகுகளும் பிளாஸ்ரிக் படகுகளும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதையும் காணமுடிகிறது.

## ஜனாதிபதி ஜயவர்த்தனா ஜெயவர்த்தனன் ராஜீவிற்கு அவசர தந்தி

சென்னை, மார்ச் 12

இலங்கைத் தமிழரை பட்டினிச்சாவு, படுகொலையில் இருந்து காப்பாற்றும் படி உலகத் தமிழ் இளைஞர் சம்மேளனத் தலைவர் டாக்டர் ரி.ஆர். ஜனார்த்தனன் காந்திக்கு அவசரத் தந்தி ஒன்றை அனுப்பிவைத்து இருக்கிறார். (இ-எ)

## யாழ் மக்களுக்கு உதவுவது குறித்து ராஜீவ் ஆராய்வு

புதுடில்லி, மார்ச் 12

யாழ் குடா நாட்டில் பொருளாதாரத் தடைக்கு உள்ளாகியிருக்கும் தமிழ் மக்களுக்கு எப்படி மனிதாபிமான அடிப்படையில் உதவலாம் என்பது குறித்து பிரதமர் ராஜீவ் காந்தி தலைமையில் உயர்மட்ட மாநாடு ஒன்றில் ஆராயப்பட்டது

இந்த மாநாடு கடந்த செவ்வாய்க்கிழமை புதுடில்லியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வெளியுறவு அமைச்சர் என்.டி. திவாரி, இணை அமைச்சர்கள் நட்வர்சிங், சிதம்பரம் உட்பட முக்கிய உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதற்கு முன்னர் அரசியல் விவகாரக் குழுவும் கூடி ஆராய்ந்தது.

குழுவின் தீர்மானம் அங்கீகாரத்துக்காக அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிகிறது (இ-எ)

## 20 சிப்பாய்கள் படுகாயம்!

கொழும்பு, மார்ச் 12

அனுராதபுரம் மாவட்டத்தில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் 20 சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

சாலியபுரவில் உள்ள கஜபா பிரிவைச் சேர்ந்த சிப்பாய்கள் ட்ரக் ஒன்றில் கடந்த செவ்வாய் காலை பதவியா வீதியூடாகச் சென்று கொண்டிருந்தனர்.

காலை 9 மணியளவில் யக்காவங்குவ என்னும் இடத்தில் ட்ரக் குடை சாய்ந்தது.

20 சிப்பாய்கள் படுகாயமடைந்தனர். முதலில் மதவாச்சியில் சேர்க்கப்பட்ட இவர்கள் பின்னர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டனர். (உ-எ)

## கிராமவாசிகளை காணோம்

கொழும்பு, மார்ச் 12

திருகோணமலை மாவட்டத்தில் சிறிபுர குடியேற்றத் திட்டத்தில் மாடு மேய்த்துக் கொண்டு நின்ற 5 சிங்கள கிராம வாசிகளை இனந் தெரியாதோர் கடத்திச் சென்றனர்.

கடத்தப் பட்டவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் சந்தேகம் தெரிவித்திருக்கின்றன. (உ-எ)

முச்சந்தி முனி



அடிக்குமேல் அடிச்சா அம்மியும் நகரும் என்பினம், ஆர்ஜென்ரீனா அடிச்ச ஒரு அடியோடை இலங்கையார் நகர்ந்திட்டார் பார்க்க யில்லையே!

## எரிபொருள் தடையை மீளாய்வு செய்ய முடிவு

கொழும்பு, மார்ச் 12

யாழ் குடாநாட்டு மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு எரிபொருள் தடையை மீளாய்வு செய்வது என்று அமைச்சர்கள் நேற்று விருப்பம் தெரிவித்தனர்.

தீவிரவாதிகள் நன்மை பெறாத வகையில் பொதுமக்கள் நிவாரணம் பெறும் விதத்தில் இது பற்றி ஆலோசிக்கப்படவுள்ளது. (இ-எ)

## குடாநாடு தவிர்ந்த வடக்கு, கிழக்கின் ஏனைய இடங்களில் இடைத்தேர்தல்

கொழும்பு, மார்ச் 12

யாழ் குடாநாடு தவிர்ந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காலியான நாடாளுமன்றத் தொகுதிகளில் இடைத் தேர்தல்களை நடத்த அரசு முடிவு செய்துள்ளது.

நேற்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது

பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இடைத் தேர்தல்களை நடத்துவதன் மூலம் ஜனநாயக நடவடிக்கைகளுக்கு இடமளிப்பது என்றும் அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (இ-எ)

## ● ஆயுதங்களுடன் சரண் அடைந்தால் சன்மானமாம்!

கொழும்பு, மார்ச் 12

ஆயுதங்களுடன் சரணடையும் தீவிரவாதிகளுக்கு சன்மானமும் புனர்வாழ்வும் அளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது சம்பந்தமான விவரங்களை வெகுஜன தொடர்பு நிலையம் வெளியிட்டுள்ளது.

சரணடைய விரும்பும் தீவிரவாதிகள் இராணுவ இணைப்பு அதிகாரி அலுவலகம், பொலீஸ் நிலையங்களில் சரணடையலாம்,

அரச அதிபர், உதவி அரச அதிபர், பாடசாலை அதிபர் ஆகியோரிடமும் தீவிரவாதிகள் சரணடையலாம்.

கீழ்க்கண்ட ஆயுதங்களுடன் சரண் அடைபவர்களுக்கு குறிப்பிடப்பட்ட பணம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வேலை நிறுத்தத்தில்

## பதவிகளை இழந்த அரச ஊழியருக்கு நிவாரணம்

கொழும்பு, மார்ச் 12

1980 வேலை நிறுத்தத்தில் பதவி இழந்த அரச ஊழியருக்கு நிவாரணம் வழங்கும் ஒரு திட்டத்தை அமைச்சரவை நேற்று அங்கீகரித்தது.

அமைச்சர் மொன்டேகு ஜெயவிக்கிரமாவின் சிபார்சைத் தொடர்ந்தே இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டது. (இ-எ)

# 14 தமிழர் சுட்டுக் கொலை!

## மட்டக்களப்பில் தாக்குதல்கள்

மட்டக்களப்பு, மார்ச் 12

பொலீஸ் கொமாண்டோக்கள் மட்டக்களப்பில் நடத்திய இரண்டு தாக்குதல்களில் 14 தமிழர் உயிரிழந்தனர்.

சவளக்கடை, புத்தூர் ஆகிய இடங்களில் பொலீஸ் கொமாண்டோக்கள் நடத்திய தேடுதலின் போதுதான் இத் தமிழர்கள் உயிரிழந்தனர் என்று தெரிகிறது.

சவளக்கடையில் பத்துத் தமிழரும், புத்தூரில் 4 தமிழரும் கொல்லப்பட்டனர்,

இதனிடையில் கொல்லப்பட்ட பதினான்கு தமிழரும் தீவிரவாதிகள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன (இ-எ)

## அடக்குமுறையை எதிர்த்து கூலிப்படை வெளியேற்றம்

லண்டன், மார்ச் 12

தமிழர் மீது இலங்கை இராணுவம் கட்டவிழ்த்துவிடும் அடக்குமுறை நடவடிக்கைகளை ஆட்சேபித்து இலங்கையில் பணியாற்றும் பிரிட்டிஷ் கூலிப்படையினரில் சிலர் வெளியேறிவிட்டனர்.

லண்டன் டெயிலி மெயில் மேற்கண்ட செய்தியை வெளியிட்டது.

இலங்கையில் இருந்து வெளியேறிய பிரிட்டிஷ் கூலிப்படையினரை ஆதாரம் காட்டி லண்டன் 'டெயிலி மெயில்' இச்செய்தியை வெளியிட்டது.

ஆனால் வெகுஜன தொடர்பு நிலையம் லண்டன் பத்திரிகைச் செய்தியை மறுத்து அறிக்கை வெளியிட்டது

'கூலிப்படைகளை தீவிரவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் இலங்கை பயன்படுத்தவில்லை. எமது படையினருக்கு பயிற்சி அளிக்கவே அவர்களைப் பயன்படுத்துகின்றோம்'— இப்படி இலங்கை அரசு அறிக்கை கூறுகின்றது. (உ-எ)

## ஆரைப்பற்றில் அதிரடி முகாம்

கொழும்பு, மார்ச் 12

ஆரைப்பற்றைக் கிராமத்தில் அதிரடிப்படை முகாம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை அமைக்கப்பட்டது.

மட்டக்களப்பு கல்முனை வீதியில், மட்டக்களப்பில் இருந்து ஐந்து மைல் தொலைவில் ஆரைப்பற்றைக் கிராமம் உள்ளது. (உ-எ)

## தமிழகத்தில் இருந்து படகுச் சேவை

சென்னை, மார்ச் 12

யாழ்ப்பாணத்துக்கு இந்தியாவில் இருந்து எரிபொருள், உணவு முதலிய பொருள்களைக் கொண்டு செல்ல படகுச் சேவை ஒன்றை நடத்த தமிழ் ஈழப் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி முன்வந்துள்ளது.

இக்கட்சித் தலைவர் திரு பி.கே. பாலசுப்பிரமணியம் இத்தகவலை திருச்சியில் நேற்று வெளியிட்டார்.

இதர தமிழ்ப் போராளி அமைப்புக்களின் ஆதரவுடன் இந்த சேவை நடத்தப்படும் என்று அவர் மேலும் சொன்னார். (இ-எ)

வலி வடக்கில் இடம்பெயர்ந்தோரின்

## உடைமைகளை அகற்ற இராணுவம் அனுமதி

### இன்று காலை கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

வலிகாமம் வடக்குப் பகுதியிலிருந்து குடிபெயர்ந்தவர்களை தமது வீடுகளுக்குள் திரும்பி வரலாம் எனவும் அதற்கு தம்மாலான உதவிகளைச் செய்து தருவதாகவும், வரமுடியாதவர்கள் தமது உடைமையினை எடுத்துச் செல்வதற்கு அனுமதி அளிப்பதாகவும் இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

வலிகாமம் வடக்கைச் சேர்ந்த கட்டுவன், வறுத்தலைவிளான், குரும்பசிட்டி, பயிலிட்டி வடக்கு ஆகிய பகுதிகளில் இருந்து அண்மைய சம்பவங்களால் குடிபெயர்ந்தவர்கள், அகதிகளாக உள்ளவர்கள் ஆகியோரது புனர் வாழ்வு சம்பந்தமாக சம்பந்தப்பட்ட உயர் இராணுவ அதிகாரிகள் நாலு பேர் கொண்ட உயர்மட்ட அரசாங்க அதிகாரிகளும் வலிகாமம் வடக்கு பிரசைகள் குழு அங்கத்தவர்களும் நேற்று சந்தித்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## அவசரசிகிச்சை வார்ட்

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ் ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைக்கென புதிய வார்ட் ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வார்ட்டில் ஆண்கள் பெண்கள் இருபாலாரும் ஒரே நேரத்தில் அனுமதிக்கப்படுவர். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

விற்பனைக்கு

45 நாள் Hy - Line வெள்ளை Nel - Farm சிவப்பு பேட்டு குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. ந. ஸ்ரீதரன். Red RosesFarm, தெணியம்மை தெரு, வல்வெட்டித்துறை Gem Palace, 57, கன்னாதிட்டி யாழ்ப்பாணம்.


## அடையாளம் காணப்பட்டார்

யாழ்ப்பாணம் மார்ச் 12

கோட்டை ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி மரணமான மேலும் ஒருவரின் சடலம் அடையாளம் காணப்பட்டது.

வவுனியா பூவரசங்குளத்தைச் சேர்ந்த சின்னையா இராசலிங்கம் (36 வயது) என்பவரே அடையாளம் காணப்பட்டவராவார்.

இதேவேளை சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினால் இறந்தோர் எண்ணிக்கை 13 ஆக உயர்ந்துள்ளது. (உ-10)

## பண்டிதமணி நினைவுதினம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

ஈழத்தின் முதுபெரும் தமிழறிஞர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் முதலாவது நினைவுதினம் நாளை வெள்ளிக்கிழமை அனுட்டிக்கப்படுகிறது.

முதலாவது நினைவு தினத்தை முன்னிட்டுப் பண்டிதமணி எழுதிய இருபத்தேழு கட்டுரைகளைக் கொண்ட தொருநூல் 'செந்தமிழ் களஞ்சியம்' என்ற தலைப்பிலும்—

பண்டிதமணியின் அரியசேவை குறித்து இலங்கை இந்திய பேரறிஞர்கள் எழுதிய நாற்பது கட்டுரைகள் 'பண்டிதமணி நினைவுமலர்' என்ற மகுடத்திலும் அடுத்தமாதம் வெளிவர விருக்கின்றன.

அச்சமைப்பு வேலைகள் பூர்த்தி அடையும் நிலையில் உள்ள நூலும் மலரும் இலக்கிய ரசிகர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பெரும்பயன் அளிக்கக்கூடியன என்று பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் காரியதரிசி திரு அ. பஞ்சாட்சரம் தெரிவித்தார். (இ)

# பயிற்றப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கை வீழ்ச்சி!

## கண்டிக்கப்பட வேண்டியது என்கிறார் பேராசிரியர்

பலாலி, மார்ச் 12

அகில இலங்கை ரீதியாகப் பயிற்றப்பட்ட ஆசிரியர்களது விகிதாசாரம் முன்பு 90 சதவீதமாக இருந்தது தற்போது 45 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இத்தன்மை உலக ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கல்வித் தத்துவத்திற்கு முற்றிலும் முரணானதாக இருப்பதுடன் கண்டிக்கப்பட வேண்டியதும் ஆகும்.

யாழ் பல்கலைக் கழகக் கல்வித்துறைத் தலைவர் பேராசிரியர் ப. சந்திரசேகரம் மேற்கண்டவாறு கூறினார்,

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலக நாடுகளில் இஸ்ரவேல் அவுஸ்திரேலியா சோவியத்யூனியன் ஆகியன நூறு சதவீதம் பயிற்றப்பட்ட ஆசிரியர்களையே கடமையில் ஈடுபடுத்தியுள்ளன.

தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கல்வி வெள்ளை அறிக்கையின்படி அமைக்கப்பட்ட ஆறு கல்விக் கல்லூரிகளில் ஒன்றுதானும் தமிழ்ப் பகுதிகளில் அமைக்கப்படாதது வேதனைக்குரியது

முன்பு வடபகுதியில் இயங்கிவந்த திருநெல்வேலி, நல்லூர், கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் மூடப்பட்டன.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகூட இன்று அரை உயிரில் ஊசலாடுகின்றது.

கோப்பாய் மட்டுமே இன்று இங்கு ஒரேஒரு பயிற்சிக் கல்லூரி ஆகும். மட்டக்களப்பிலே கூட 45 மாணவர்களுடன் ஒரு பயிற்சிக் கல்லூரி இயங்குகிறது இங்கு மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதுடன் மேலும் பயிற்சிக் கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டும்,

இன்று எவ்வளவோ நிதி பற்றாக்குறையாக் சேவை மனப்பான்மையுடன் யாழ் பல்கலைக்கழகக் கல்விப்பகுதி 100 க்கும் மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கின்றது

இன்னும் இந்த எண்ணிக்கையை நாம் அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

இப்படி அவர் கூறினார், (இ-119)

## வடமாகாண ஆசிரியர் சங்கம் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதில் பாதுகாப்புப் படையினரை அரசாங்கம் தீவிரமாக ஈடுபடுத்தி வருகின்றது.

இதை வடமாகாண ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதாக சங்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுகாண முற்படுகின்ற அரசின் நடவடிக்கை சர்வதேச ரீதியாக பல நாடுகளின் கண்டனத்துக்குள்ளாகி இருப்பது வெளிப்படை.

எந்த நாட்டிலும் நடைபெறாத இவ்வித மிலேச்சத்தனமான நடவடிக்கையை உடனடியாக நிறுத்தும்படி சங்கம் வற்புறுத்துகிறது—

இப்படி சங்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (இ-எ)

## மாணவிகளுக்கு முதலுதவி வகுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

சுகாதாரக் கல்வி அமைச்சின் கீழ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு முதலுதவி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

இதற்கான ஒழுங்குகளை வளர்ந்தோர் கல்வி அதிகாரியும் வடபிராந்திய சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆணையாளருமான திரு. சி.எஸ்.சுப்பிரமணியம் செய்துள்ளார். (இ-5)

## அருளுரை

யாழ்ப்பாணம், மார்ச் 12

அச்சுவேலி - வளலாய் சித்திவிநாயகர் ஆலயத்தில் 'சமய வழிபாடும், கூட்டுப்பிரார்த்தனையும்' என்னும் பொருள் பற்றி ஆத்மஜோதி திரு. நா. முத்தையா உரையாற்றினார்.

தேவஸ்தான சிவாசாரியார் பிரம்மஸ்ரீ க. ஜெயராம சர்மா உட்பட பல கல்விமான்களும் சொற்பொழிவாற்றினர். (இ-5)

## பாதிக்கப்பட்ட மாணவர் விவரம்

வட்டுக்கோட்டை, மார்ச் 12

வன்செயலால் பாதிக்கப்பட்ட பாடசாலைப் பிள்ளைகளின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு யாழ் செயலக மாவட்டத் திட்டமிடல் பணிமனை யாழ் மாவட்டப் பாடசாலை அதிபர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மாணவச் பெயர், கல்வி பயிலும் வகுப்பு, பெற்றோர் வன்செயலால் பாதிக்கப்பட்டிருப்பின் விவரம் (உயிர்ச்சேதம்) பாதிக்கப்பட்டு வந்த மாவட்டம், பிற விவரங்கள் கோரப்பட்டுள்ளன. (இ-161)

## இலங்கை அரசுதான் திட்ட வட்டமான யோசனைகளைத் தெரிவித்து வந்ததா?

### ஜே ஆர். கூற்றுக்கு அமிர் மறுப்பு

சென்னை, மார்ச் 11

ஒவ்வொரு முறையும் இலங்கை அரசுதான் திட்டவட்டமான யோசனைகளைச் சமர்ப்பித்து வந்துள்ளது என்ற திரு ஜெயவர்த்தனவின் கூற்றை தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் வன்மையாக மறுத்திருக்கிறார்.

பிரதமர் ராஜீவ்காந்திக்கு கடைசியாக அனுப்பிய கடிதத்தில் திரு. ஜெயவர்த்தன இப்படிக் கூறியிருந்தார்.

அதுமட்டுமல்ல இலங்கை அரசு மீது செலுத்தும் நிர்ப்பந்தம்போன்று போராளி அமைப்புக்கள் மீது நிர்ப்பந்தம் செலுத்த இந்தியா தவறிவிட்டது என்றும் திரு. ஜெயவர்த்தன தனது கடிதத்தில் கூறியிருந்தார்.

இவை குறித்து திரு. அமிர்தலிங்கம் சொன்னதாவது:-

திரு. ஜி பார்த்தசாரதி தயாரித்தது இணைப்பு -சி யோசனை

கூட்டணியுடன் நடத்தப்பட்ட ஆலோசனைகளைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட 'இணைப்பு -சி' யோசனையை திரு. ஜெயவர்த்தன 1984 சர்வகட்சி மாநாட்டின் கை நழுவ விட்டார்.

1985 டிசம்பரிலும் இந்தியாவின் வேண்டுகோளுக்கு இணங்க கூட்டணி தனது யோசனைகளைச் சமர்ப்பித்தது 1986 ஜனவரியில் இதனை ஜெயவர்த்தன அரசு நிராகரித்தது

1986 ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் கூட்டணி-அரச பேச்சுக்களில் உருவான யோசனைகள் குறித்து போராளி அமைப்புக்களும் இந்திய அரசின் வேண்டுகோளுக்கு இணங்க, தங்கள் பதில் யோசனைகளைச் சமர்ப்பித்தன.

சுதந்திரத் தமிழ் நாட்டுக் கோரிக்கையில் இருந்து இறங்கி போராளி அமைப்புக்கள் தங்கள் யோசனைகளைச் சமர்ப்பித்தன.

இலங்கை அரசின் போக்கின் காரணமாகத் தான் பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தன.

இப்படி திரு. அமிர்தலிங்கம் சொன்னார். (இ-எ)

## மக்கள் முகம்

### கதிரிப்பாய் ஆரம்ப சுகாதார நிலையம்

சுரவெட்டி, மார்ச் 12

கதிரிப்பாய் ஆரம்ப சுகாதார நிலையத்தின் வருடாந்த நிர்வாகிகள் தெரிவு அண்மையில் தலைவர் திரு. த. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது

தலைவர் திரு. த. சிவலிங்கம், உப தலைவர் திருமதி ஜெ. சபாரத்தினம், செயலாளர் செல்வி இ. லலிதா, உப செயலாளர் செல்வி சி. சிவசக்தி, பொருளாளர் செல்வி ஸ்ரீமதி மீரா

மற்றும் நிலையத்தின் நிரந்தரப் பொறுப்பாளராக செல்வி ச. செயந்தி, நிர்வாக உறுப்பினராக திரு. த. பரஞ்சோதி, நிலைய சுகாதார பொறுப்பாளராக செல்வி சி. கலைச்செல்வி, நிலைய வழி நடத்துனராக செல்வி நா. கேந்திரவதனி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-70)

## விளையாட்டரங்கு

### பாடசாலைகளின் இல்ல விளையாட்டுப்போட்டி முடிவுகள்

### அப்பர் இல்லம் சாம்பியனானது

வட்டுக்கோட்டை, மார்ச் 12

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி வித்தியாசாலை அதிபர் திரு க. சிவநேசர் தலைமையில் நடைபெற்றது.

அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் இல்லங்களுக்கிடையே நடைபெற்ற இப்போட்டியில் 366½ புள்ளிகளைப் பெற்ற (பச்சை) அப்பர் இல்லம் முதலாவது இடத்தையும் 335½ புள்ளிகளைப்பெற்ற சுந்தரர் (நீலம்) இல்லம் இரண்டாவது இடத்தையும் 296 புள்ளிகளைப் பெற்ற மாணிக்கவாசகர் (சிவப்பு) இல்லம் மூன்றாவது இடத்தையும் பெற்றுக் கொண்டன

இப்போட்டியில் அஞ்சல் ஓட்ட சம்பியனாக அப்பர் (பச்சை) இல்லமும் அணிநடைச் சம்பியனாக சுந்தரர் (நீலம்) இல்லமும் இல்லச்சம்பியனாக அப்பர் (பச்சை) இல்லமும் தெரிவு செய்யப்பட்டன.

போட்டியில் பின்வருவோர் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

13 வயதுக்குட்பட்டோர்:-

ஆண்:- ஜெ. தமிழழகன் (மாணிக்கவாசகர்) பெண்:- எம். சாந்தி (அப்பர்) கே. சிவமலர் (மாணிக்கவாசகர்)

15 வயதுக்குட்டோர்:-

ஆண்:- பி. சுதா (அப்பர்) பெண்:- ஆர் நந்தினி (சுந்தரர்)

17 வயதுக்குட்பட்டோர்:-

ஆண்:- எஸ். சியாம்சுந்தார் (அப்பர்) பெண்:- வி. தாட்சாயினி (அப்பர்)

19 வயதுக்குட்பட்டோர்:-

ஆண்:- கே. சிவகுமார் (மாணிக்கவாசகர்) எஸ் சிவராசா (மாணிக்கவாசகர்)

பெண்:- ஆர். மனோன்மணி (அப்பர்) (இ-161)

### மெய்கண்டான் மெய்வல்லுனர் போட்டி

வட்டுக்கோட்டை, மார்ச் 12

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி பாடசாலைக்கு பின் அமைந்துள்ள மைதானத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2மணி அளவில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் திரு. ஆ. இராசநாயகம் தலைமையில் நடைபெறும் இப் போட்டிக்கு யாழ் கல்வித்திணைக்கள இளைப்பாறிய நிர்வாக அதிகாரி திரு சோ. க. வேலாயுதர் பிரதம விருந்தினராகவும் வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு ப. சண்முகராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கிறார்கள். (இ-161)

### போல் பிள்ளை இல்லம்

பருத்தித்துறை, மார்ச் 12

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் போல் பிள்ளை இல்லம் முதலாவது இடத்தைப் பெற்றது

போல் பிள்ளை இல்லம் 360 புள்ளிகளையும் தாமோதரம் இல்லம் 358 புள்ளிகளையும் செறட் இல்லம் 250 புள்ளிகளையும் கணபதிப்பிள்ளை இல்லம் 205 புள்ளிகளையும் ஏப்பிரகாம் இல்லம் 183 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (இ-118)

### வள்ளுவர் இல்லம்

கரவெட்டி, மார்ச் 12

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் இடம் பெற்றன.

இப்போட்டிகளில் வள்ளுவர் இல்லம் முதலாம் இடத்தையும், பாரதி இல்லம் இரண்டாம் இடத்தையும், இளங்கோ இல்லம் மூன்றாம் இடத்தையும், கம்பர் இல்லம் நான்காம் இடத்தையும் பெற்றன. (இ-70)


★ பிரயாணத்திற்குத் தயாராகுங்கள்

உங்களைப் பாதுகாப்பாகக் கூட்டிச் செல்ல

GLORIA TRAVELS

ஆயுத்தமாக இருக்கிறது

● அவுஸ்திரேலியா
● ஜேர்மனி
● பிரான்ஸ்
● இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு நீங்கள் தயக்கமின்றிச் செல்ல எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்து தருகின்றோம்.

எமது பிரதான முகவர் உங்களைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்கிறார்.

பாஸ்போட், பொண்ட் (Bond). விசா, ரிக்கட் ஆகியனவும் செய்து தரப்படும்.

★ சவூதி அரேபியா

இங்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ள விரும்புபவர்கள் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

GLORIA TRAVELS,
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

★ எமக்கு வேறு கிளைகள் கிடையாது


# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## தெல்லிப்பளையில் சீனி பங்கீடு

பலாலி, மார்ச் 12

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது கையிருப்பிலுள்ள சீனியை அங்கத்தவர்களுக்குப் பங்கீட்டு முறையில் விநியோகித்து வருகின்றது

ஒரு குடும்பத்திற்குரிய உணவுப் பங்கீட்டுக் கார்ட்டுக்கு ஒரு கிலோ சீனி மாத்திரம் வழங்கப்படுகின்றது

இதேபோலவே மாவும் பங்கீட்டு முறையில் வழங்கப்படுகின்றது (இ-119)

## பாதிக்கப்பட்டோருக்கு கத்தோலிக்கதிருச்சபை உதவி வழங்கிவருகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 12

இனக்கலவரங்கள் வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கத்தோலிக்க திருச்சபை உடனுக்குடன் உதவி புரிந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது

கத்தோலிக்க திருச்சபையின் சமூக பொருளாதார பணியகமான யாழ் மறை மாவட்ட மனித முன்னேற்ற நிலையத்தினர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மக்களின் தேவைகள் மக்கள் மத்தியில் வாழும் அருட்தந்தையர்கள் மூலமே நடுநிலையத்திற்கு அறிவிக்கப்படுகின்றன.

குறைகளை அறிந்ததும் யாழ் ஆயரின் அனுமதியுடன் அப்பகுதிகளில் சேவைபுரியும் அருட்தந்தையர் வழியாகவே நடுநிலையம் மக்களுக்கு உதவிகள் வழங்குகின்றது.

நடுநிலையத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளாமலே அருட்தந்தையர் மூலமாகப் பாதிக்கப்பட்டோர்கள் உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்

யாழ் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள மக்கள் விரைவில் நிவாரண உதவிகளைப் பெற இதுவே சிறந்த வழி என மனித முன்னேற்ற நடுநிலையம் கருதுகின்றது.

எனவே பாதிக்கப்பட்டவர்கள் எம்மதத்தவரானாலும் அயலிலுள்ள ஆலயத்தின் கத்தோலிக்க மதகுருவுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## சித்தி அடைந்த மாணவருக்கு பாராட்டு

யாழ்ப்பாணம் மார்ச், 12

நாம் வளர்த்தெடுத்த தமது மாணவக் குழந்தைகளை பிறர் போற்றக் காண்பது தான் ஆசிரியர்களது சிறந்த இலட்சியமாகும் இந்த இலட்சிய நிறைவு எமது ஆசிரியர்களுக்கு இன்று கைகூடுவதற்கு காரணமாக இருந்த மாணவச் செல்வங்களைப் பாராட்டுகின்றேன்.

இளையதம்பி தமிழ் வித்தியாலயத்திலிருந்து ஆறும் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியடைந்து பிரபல்யமான கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவர்களை பெற்றோரால் அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் அதிபர் கா கணேசதாசன் மேற்கண்டவாறு கூறினார்.

இப்பாடசாலையின் ஆசிரியர்களது சிறந்த வழிகாட்டலின் நிமித்தம் 32 மாணவர்களுள் 30 மாணவர்கள் சித்தியடைந்தது பாராட்டக் கூடியதாகும் என்றும் அவர் கூறினார்.

ஆசிரியர்கள் பலரும் பெற்றோர்களும் பாராட்டுரை வழங்கினர்.

இறுதியில் மாணவர் பயன்தரும் மரங்களை நட்டனர். (இ)

## பயிற்சி நெறி

மானிப்பாய், மார்ச் 12

இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கான முறைசாராக் கல்விக்கான (உடை அமைத்தலும் - தையலும்) பயிற்சி நெறிகள் இம்மாதம் 15 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகும்.

அதிபர் திரு எஸ். எம். மூர்த்தி இதனை தெரிவித்துள்ளார். (இ-90)

## இருவர் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில்

பலாலி, மார்ச் 12

கடந்த சனிக்கிழமை இரவு யாழ்ப்பாணத்தில் இராணுவத்தால் ஏவிவிடப்பட்ட மூர்க்கத்தனமான ஷெல்விற்கு இலக்காகிய இருவர் தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

எஸ். காளிமுத்து (வயது 23) என்ற யாழ்ப்பாணம்கன்னாதிட்டியைச் சேர்ந்த ஐஸ்பழ வியாபாரி வலது காலை இழந்து மிகவும் ஆபத்தான நிலையில் இரத்தம் ஏற்றப்பட்டபடி சுயநினைவிழந்து இருக்கின்றார்.

திரு. நடராசா உதயகுமார் (21 வயது) என்ற யாழ்ப்பாணம் கச்சேரியடியைச்சேர்ந்த மோட்டார்மெக்கானிக் காலில் காயமுற்றபடி அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-119)


HORIZON ENTERPRISES

பிரயாண ஒழுங்குகள்

● குவைத் ● சவூதி ● டோகா கட்டார் ● மாலைதீவு

ஆகிய நாடுகட்கு நாம் குறிப்பிட்டபடியே உங்களது பயணத்திற்கான பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும் பணிப்பெண்களுக்கான பிரயாண ஒழுங்குகள் குறைந்த கட்டணத்தில் துரிதகெதியில் மேற்கொள்ளப்படும்.

எமது முகவர் நிலையத்தினூடு பயணம் மேற்கொள்வோர் பெயர் விபரங்களை வாரந்தோறும் வெளியிடுகிறோம், கடந்த வாரம் பயணம் மேற்கொண்டோர் விபரம், இவ்வாரம் பயணம் மேற்கொள்வோர் விபரங்கள் அடுத்தவாரப் பத்திரிகையில். நாம் மத்திய கிழக்கு நாடுகளுக்கான ஒழுங்குகள் மட்டுமே மேற்கொள்கிறோம். எமக்கு வடபகுதியில் வேறு கிளைகள் கிடையாது. எம்முடன் தொடர்புகொள்வோர் முத்திரை ஒட்டிய கவருடன் தொடர்புகொள்ளவும்.

1. தம்பிராசா வசந்தராசா
புலவனூர் லேன், கலியங்காடு யாழ்.
2. ஜேம்ஸ் பவஸ்ரின் ராசநாயகம்
இளவாலை மேற்கு, இளவாலை.
3. கதிரவேலு கருணாநிதி
இணுவில் மேற்கு, சுன்னாகம்.
4. நல்லதம்பி மகேந்திரகுமார்
நெடுந்தீவு மேற்கு, வாட் நம். 8, நெடுந்தீவு.
5. கந்தசாமி தவராசா
துன்னாலை தெற்கு, கரவெட்டி.
6. நாகேந்திரன் பாலசுப்பிரமணியம்
விளையாட்டுமைதான வீதி, கோப்பாய்
7. ஐயம்பிள்ளை சத்தியவதி (தெற்கு) கட்டுக்காணி ஒழுங்கை, சாவகச்சேரி.
8. ஐயாத்துரை நடராசா லலிதாம்பிகை
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
9. ராகினி ராசரட்ணம்
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
10. அன்ரனி ஞானமுத்து செபஞானமலர்
அம்மன் வீதி, பண்டத்தரிப்பு.

யாழ் முகவரி;
A. பத்மதாஸ்
மதுராவீடியோ கிளப்,
இல. 96,
4 ஆம் குறுக்குத் தெரு,
சின்னக்கடை, யாழ்.
தொலைபேசி: 23549

கொழும்பு முகவரி:
HORIZON ENTERPRISES,
No. 87 2/1,
Kollupitiya Lane,
Kollupitiya
Colombo - 3
Telephone: 574000


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

உண்மைக்கு ஒரு போதும் அழிவில்லை;
பொய்க்கு ஒருபோதும் வாழ்வு இல்லை.
— பகவான் சத்தியசாயிபாபா

உதயன்
இல, 15, திருவள்ளுவர் ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 12-03-1987 உ.செ இல 88

## அச்சத்தில் தடுமாற்றம்!

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் அவதானிகளை உடனடியாக இலங்கைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வாறு கோரும் பிரேரணை ஒன்றை ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில் கொண்டு வருவதற்கு ஆர்ஜென்ரீனா முன் அறிவித்தல் கொடுத்துள்ளது.

ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடர் இப்போது ஜெனிவாவில் நடந்து கொண்டிருக்கிறது. இலங்கை சம்பந்தமான ஆர்ஜென்ரீனாவின் பிரேரணை இக் கூட்டத் தொடரில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

இலங்கையில் தமிழ் மக்களின் மனித உரிமைகள் 1983 ஆம் ஆண்டுக்குப் பின் மிகப் பெரிய அளவில் பறிக்கப்பட்டு வருகின்றன. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்ற போர்வைக்குள் தமிழ் இளைஞர்கள், பெரியவர்கள் என்போரின் அடிப்படை வசதிகள் கூட மறுக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்படுகின்றனர். தேடுதல் நடவடிக்கை என்ற பெயரில் கைது செய்யப்படுவோர் பற்றிய விபரங்கள் எவருக்கும் தெரிவிக்கப்படுவதில்லை. அவர்கள் மீது வழக்குத் தொடரப்படுவதும் இல்லை. தடுப்பு முகாம்களில் வைத்து, எழுத்தில் வடிக்க முடியாத கொடுமையான சித்திரவதைகளுக்கு அவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள். இதற்கும் மேலாக கைது செய்யப்பட்டவர்கள் காணாமற் போன கதைகள் பல. அகதி முகாம்களில் இருந்தவர்களே சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவங்கள் பல.

தமிழர்களின் உயிரோடும், உடலோடும் சம்பந்தப்பட்ட சித்திரவதைகள் — மனித உரிமை மீறல்கள் மறைமுகமாகச் செய்யப்படுகின்றன. ஆனால் அவ்வாறு நடக்கவில்லை என்று அரசாங்கம் தொடர்ச்சியாக மறுத்து வருகிறது. பொய்யை மெய்யாகவே காட்டி வந்தால் அது மெய்யாகிவிடும் என்ற அசட்டுத்தனமான நம்பிக்கை போலும் அதற்கு!

ஆனால், இலங்கை அரசின் ஆத்ம நண்பனான அமெரிக்காவே, அண்மையில், இந்த நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்று தனது உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்றில் அடித்துச் சொல்லியிருக்கிறது. நல்ல நண்பனின் குட்டை அம்பலமாக்கி இருக்கிறது.

மறைமுக மனித உரிமை மீறல்களை விடக் கடந்த இரண்டரை மாதங்களாக வெளிப்படையான மனித உரிமை மீறலைச் செயற்படுத்தி வருகிறது இந்நாட்டு அரசு. ஆம்; அதுதான் தமிழ் மக்கள் மீதான எரிபொருள் தடை எனப்படும் பொருளாதாரத் தடை.

இத்தனையையும் செய்து கொண்டு ஆர்ஜன்ரீனா சமர்ப்பித்துள்ள பிரேரணையைத் தோற்கடிக்க இலங்கை அரசு தீவிரமாக முயன்று வருகிறது. அச்சத்தில் தடுமாறுகிறது.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் பங்குபற்றும் இலங்கைக் குழுவின் தலைவர், ஜனாதிபதியின் சகோதரரும் இந்நாட்டு மனித உரிமை இயக்கப் பிரமுகருமான திரு. எச். டபிள்யு ஜெயவர்த்தன ஆவார்.

அவர் இலங்கையில் மனித உரிமை மீறப்படுவதில்லை என்று வரிந்து கட்டிக் கொண்டு வாதாடுகிறார். சிங்களவர் கொல்லப்படுவது குறித்து கவலை தெரிவிக்காத இந்தியாவுக்கு மனித உரிமைகள் பற்றிப் பேசுவதற்கு என்ன யோக்கியதை உண்டு என்று காரசாரப்பட்டிருக்கிறார். அது மட்டுமன்றி இனப்பிரச்சினையில் தலையிடுவதற்கு இந்தியா யார் என்றும் ஆத்திரமாகக் கேட்டிருக்கிறார் அந்தத் திம்புவீரர்.

அத்தனையும், இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாக, பிரஸ்தாப கூட்டத்தில் இந்தியப் பிரதிநிதி தெரிவித்த கண்டனத்தினால் உண்டான ஆத்திரத்தின் விளைவுகளே.

அவை மட்டுமா?

இனப்பிரச்சினை விவகாரத்தில் அத்துலத்முதலிக்கு அடுத்த தம்பியாக மாறியிருக்கும் வெளிநாட்டமைச்சர் ஹமீத் லண்டன் விரைந்துள்ளார். ஆர்ஜென்ரீனாவுக்கும் பிரிட்டனுக்கும் போக்லந்து விடயத்தோடு பகைமை. அந்தப் பகைமையை லாபமாக்கி தனக்கு எதிரான பிரேரணையை தோற்கடிக்கும் முயற்சியில் இலங்கை அரசு வேகமாக இறங்கி இருக்கிறது. போக்லந்து விவகாரத்தில் பிரிட்டனுக்கு ஆதரவளித்து உதவியதற்கு அதனிடமிருந்து பிரதியுபகாரம் பெறுவதற்கு முயற்சிக்கிறது.

உண்மையில் தனது ஆட்சியில் மனித உரிமைகள் மீறப்படவில்லை என்றால் இலங்கை அரசுக்கு ஏன் இந்தப் பயம்? சர்வதேச அவதானிகள் வந்து பார்த்துவிட்டு இல்லாததையா சொல்லுவார்கள்? குற்றம் செய்யவில்லை என்றால் பயப்படுவான் ஏன்? அஞ்சியவனுக்கு ஆகாயம் எல்லாம் பேய்தானே!

இதனை மனித உரிமை ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் முப்பது நாடுகளாவது உணராமலா இருக்கப் போகின்றன. இன அழிப்பின் உச்சக் கட்டம் இங்கு ஆரம்பித்திருக்கிறது. போர் பிரகடனமாகி விட்டது. இப்போது பிரேரணையில் கூறப்பட்டவாறு உடனடியாக அவதானிகள் இங்கு வந்தால் அவர்களுக்கு நிறையச் சரக்குச் சேரும். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள அவர்கள் இப்போதே விரைந்து வரச் சந்தர்ப்பம் கிடைப்பதாக.

## குழந்தைகளைப் பெற விஞ்ஞான உத்திகளைக் கையாளக் கூடாது

### வத்திக்கான் தடை விதிப்பு

வத்திக்கான், மார்ச் 11

குழந்தைப் பேறு இல்லாதவர்கள் குழந்தை பெறுவதற்கு சில விஞ்ஞான உத்திகளைக் கையாளக் கூடாதென்று வத்திக்கான் தலைமைப் பீடம் கத்தோலிக்க மக்களுக்கு தடை விதித்துள்ளது.

சோதனைக் குழாயில் கரு வளர்த்தல், மாற்றுத் தாயிடம் கருவைப் பதித்து வளர்த்தல், செயற்கை முறையில் கருத்தரித்தல், மனிதக் கருக்களைக் கொண்டு ஆய்வுகளை நடத்துதல் ஆகிய விஞ்ஞான உத்திகளே வத்திக்கான் தலைமைப் பீடத்தினால் தடை செய்யப்பட்டவை ஆகும்.

வத்திக்கான் தலைமைப் பீடத்தின் தடை உத்தரவை கிறிஸ்தவ மத குருமார்கள் வரவேற்றனர்.

அதே நேரம் விஞ்ஞானிகளும் டாக்டர்களும் தடை உத்தரவு குறித்து கவலை தெரிவித்தனர். (இ-எ)

### ரஷ்ய மந்திரி சென்றபோது குண்டுவெடிப்பு

வியன்டியன், மார்ச் 11

லாவோஸுக்கு ரஷ்ய வெளிநாட்டமைச்சர் சென்ற சமயம் குண்டு வெடித்து ஒருவர் பலியானார்.

லாவோஸ் தலைநகரான வியன்டியனில் சோவியத் கலாசார நிலையத்துக்கு முன்னால் இச்சம்பவம் இடம் பெற்றது. (இ-எ)

### அமால் பிரிவு கோரிக்கை

பேய்ரூட், மார்ச் 11

அகதி முகாம்கள் மீது நடத்தப்படும் ஐந்து மாத கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர பலஸ்தீன விடுதலை இயக்க வீரர்கள் குறிப்பிட்ட பகுதிகளில் இருந்து வெளியேற வேண்டும் என்று அமால் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது. (இ-எ)

## அமெரிக்கா துருப்புகளை அனுப்ப வேண்டும்

சிக்காகோ, மார்ச் 11

ஐரோப்பியாவிலும் ஜப்பான் போன்ற நாடுகளிலும் சோவியத் யூனியன் ஆக்கிரமிப்பு நடத்தும் பட்சத்தில் அமெரிக்கா தனது துருப்புக்களை அனுப்ப வேண்டும்.

சிக்காகோவில் உள்ள வெளியுறவு கவுன்ஸில் நடத்திய கருத்துக்கணக்கெடுப்பில் மேற்கண்டவாறு பெரும்பாலோர் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். (இ-எ)

## மோகன்தாஸ் புதிய வேலையில் சேருகிறார்

சென்னை, மார்ச் 11

விடுமுறையில் நிற்கும் முன்னாள் தமிழ்நாடு பொலீஸ் அதிபர் திரு. கே. மோகன்தாஸ் இம் மாதம் 18 ஆம் திகதி முதல் புதிய வேலையில் சேரப் போவதாக அறிவித்து இருக்கிறார்.

60 நாள் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட திரு. மோகன்தாஸை தமிழ் நாடு அரசு பின்னர் அரச நிர்வாக ஆன்பல பயிற்சித் திணைக்கள விசேட ஆணையாளராக நியமித்தது.

இதை திரு. மோகன்தாஸ் ஏற்க மறுத்து வைத்திய லீவில் சென்றார்.

உடனே வைத்திய பரிசோதனைக்கு வைத்தியக் குழு முன்னால் ஆஜராகும் படி தமிழ்நாடு அரசு அவரைப் பணித்தது.

அவர் வைத்திய சிகிச்சை பெறும் எர்ணாகுளத்துக்குச் சென்று வைத்திய பரிசோதனை செய்ய வைத்திய நிபுணர் குழு நடவடிக்கை எடுத்த சமயத்தில், புதிய வேலையை ஏற்றுக் கொள்ளப் போவதாக திரு. மோகன்தாஸ் அறிவித்திருக்கிறார். (இ-எ)

## வான்வெளி இலக்குகள் மீது ஏவுகணைப் பரிசோதனை

### அக்டோபரில் அமெரிக்கா நடத்தும்

வாஷிங்டன் மார்ச் 11

வான வெளியில் உள்ள இலக்குகள் மீது ஏவுகணைப் பரிசோதனைகளை இந்த ஆண்டு அக்டோபர் மாதம் தொடக்கம் அமெரிக்கா நடத்த உள்ளது.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. கஸ்பர் வீன்ஸ்பேர்கர் இத்தகவலை வெளியிட்டார்.

ரஷ்யாவின் உளவு செய்மதிகளை தாக்கி அழிக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன்னோடியாகவே இந்த பரிசோதனைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வான வெளியில் இரகசியமான இலக்குகளை அனுப்பி பின்னர் அவற்றை அழிப்பதன் மூலம் இப்பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஏற்கனவே ரஷ்யா இப்படியான பரீட்சார்த்த நடவடிக்கைகளை மேற்கொண்டது என்றும் அறிவிக்கப்பட்டது. (இ-எ)

### மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய வைன்!

பீகிங், மார்ச் 11

3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய வைன் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டது.

வெண்கல ஜாடி ஒன்றில் இந்த மதுசாரம் ஷாங் காலத்து சமாதி ஒன்றில் இருந்து மீட்கப்பட்டது.

இந்த வைனை சீன நிபுணர்கள் பரிசோதனை செய்து வருகின்றனர். (இ-எ)

**வெளி உலகில்**

லெபனான் படை எடுப்பு:

### முதலில் கண்டித்தவர் பின்பு நன்றி தெரிவித்தார்

பேய்ரூட், மார்ச் 11

மேற்குபேய்ரூட்டினுள் படையை அனுப்பியதற்காக சிரியாவை முதலில் கண்டித்த லெபனான் ஜனாதிபதி அமின் ஜெமாயல் பின்னர் நன்றி தெரிவித்து சிரிய ஜனாதிபதிக்கு செய்தி அனுப்பினார்.

மேற்குபேய்ரூட்டில் இடம்பெற்று வந்த வன்செயல்களைக் கட்டுப்படுத்த சிரியா 7,000 படை வீரர்களை அனுப்பியது.

மனிதாபிமான அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சிரிய ஜனாதிபதி ஆஸாத் பின்னர் அறிவித்தார். (இ-எ)

### 400 கோடி டாலர் அமெரிக்க உதவி

வாஷிங்டன், மார்ச் 11

அமெரிக்கா, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு பாகிஸ்தானுக்கு 400 கோடி டாலர் நிதி உதவி கொடுக்க திட்டமிட்டுள்ளது.

இது சம்பந்தமாக அமெரிக்க அரசின் யோசனையை, காங்கிரஸ் பரிசீலனை செய்யத் தொடங்கி உள்ளது. (இ-எ)

## அரசுக்கு முட்டுக் கொடுக்கும் பிரசாரத்தில் தொண்டமான்

### ஈரோஸ் அறிக்கை

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனது 49 ஆவது வருடாந்த மாநாட்டை கண்டியில் நடந்த உள்ள இவ்வேளையில் ஈரோஸ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மலையக மக்களின் கடந்த இரு நூற்றாண்டு கால வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த இன்றைய காலகட்டத்தில் இ. தொ. கா. தனது 49 ஆவது மாநாட்டை கண்டியில் நிகழ்த்தவுள்ளது.

இது குறித்து ஈழப் புரட்சி அமைப்பினராகிய நாம் சிலவற்றைச் சுட்டிக் காட்ட வேண்டியவர்களாக உள்ளோம்.

மலையக மக்கள் மத்தியில் நிலை கொண்டுள்ள பலம் பொருந்திய தொழிற் சங்கமான இ. தொ. கா. இந்த விடயங்களைச் சரிவரப் புரிந்து கொண்டு நடவடிக்கை எடுக்கத் தவறுமாயின் எதிர்காலம் நிச்சயம் இ. தொ. கா. வை எள்ளி நகையாடும் என்பதில் ஐயமில்லை.

தமது நலன்கள் புறக்கணிக்கப்பட்டதால் வீறு கொண்டு எழுந்த மக்களை 'பயங்கரவாத' நாமம் சூட்டி அழித்தொழிக்க முயற்சி மேற்கொள்ளப்படும் இன்றைய கட்டத்திலும் உலக ரீதியாகவே சிறிலங்காவின் இனக்கொலை அம்பலப்பட்டுப் போயிருக்கும் சூழலிலும் சிறிலங்கா அரசுக்கு முட்டுக் கொடுக்கும் பிரசாரத்தை மேற்கொள்ளும் மாண்பு மிகு தொண்டமான் தாம் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் மக்களுக்கு ஏற்பட்டுவரும் ஆபத்தை விளக்கிக் கொள்வார் என்றே எதிர்பார்க்கிறோம்.

#### தொடர்கதை

மலையகத்தில் நிலவும் தொழிற்சங்கப் போட்டிகள் காரணமாகவும், தொழிற் பிணக்குகள் காரணமாகவும் தோட்ட நிர்வாகத்துடன் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு 'பயங்கரவாதப் பெயர்' சூட்டி துப்பாக்கிப் பிரயோகம் செய்வதும், இளைஞர்களைக் கைது செய்வதும் தொடர் கதையாக உள்ளது.

மலையகத்தின் அமைதியைச் சீர்குலைக்க இராணுவ அத்துமீறல்களையும், அடாவடித்தனங்களையும் புகுத்த சிறிலங்கா அரசு முயல்வதை இ. தொ. கா. கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது.

சென் கூம்ஸ் தோட்டத்தில் நிர்வாகிகளுக்கும் தொழிலாளருக்குமிடையில் ஏற்பட்ட தகராறுக்கு பயங்கரவாதப் போர்வை போர்த்தி மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நான்கு வயதுச் சிறுவனும் இரு பெண்களும் உட்பட பதின்மூன்று பேர் கொல்லப்பட்ட சம்பவமானது மேற்படி எமது கருத்திற்கு வலுவூட்டத் தக்கதோர் உதாரணமாகும்.

#### "இந்தியாவட்ட பனியன்"

'இந்தியாவட்ட பனியன்' என்ற கோஷத்துடன் அரச சார்பு தொழிற்சங்கச் சார்பில் தோட்ட நடத்திய காடைத்தனமான தாக்குதல்களை எதிர்கொள்ள முனைந்த இளைஞர்களும், ஆசிரியர்களும், சமூக நலன் விரும்பிகளுமான சுமார் 260 பேருக்கு மேல் இதுவரை கைது செய்யப்பட்டிருப்பதை இ. தொ. கா. வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதாவது அதற்குச் சம்மதம் தெரிவிக்கும் செயலாகவே கருதவேண்டி ஏற்பட்டுவிடும்.

விழித்தெழும் தொழிலாளர்களின் உறுதியான போராட்டங்களைக் கண்டு இப் போராட்டங்களே புரட்சிக்கு வித்திடும் எனப்பயந்து தோட்டப் பிரச்சினைகளுக்கெல்லாம் துப்பாக்கிப் பிரயோகம் செய்து நசுக்கிவிடவே அரசு தீவிரமாக முயல்கிறது.

#### குடியேற்றம்

இவற்றுடன் கூடவே புதிதாக முளைவிடும்குடியேற்றங்கள் பற்றியும் கூற வேண்டிய கடமைப்பாடு எமக்குண்டு. ஆக்கிரமிப்பு நோக்கத்துடன் ஆயுத பாணியாக அமர்த்தப்படும் இக் குடியேற்றக்காரர்கள் மலையகத்தின் அமைதிக்கு சவாலாக விளங்குவர் என்பதில் ஐயமில்லை.

இக் குடியேற்றக்காரர்களுக்கு அரசு ரீதியாக அளிக்கப்பட்டுவரும் மின்சார வசதி, போக்குவரத்து வசதிகள், காணி வீடமைப்பு, விலங்கு வளர்ப்புக் கூடங்கள் விவசாயக் கடன்கள் என்பவற்றைத் துல்லியமாக ஆராயும் எவரும் குடியமர்த்தும் நோக்கம் குறித்து கேள்வி எழுப்பாமல் இருக்க முடியாது.

அதுவும் மலையகத்தின் நடுமையான கேந்திர முக்கியத்துவம் பெற்ற இடங்களில் அமையும் இக் குடியேற்றங்கள்-பிரதேசத்தைத் துண்டுபடுத்தல், தமிழ் பேசும் மக்களின் அடர்த்தியைக் குறைத்தல், சிங்களப் பெரும்பான்மையை நிறுவுதல் என்பவற்றையே மையமிட்டுள்ளன என்பதை உணர்ந்து கொண்டால் மலையக மக்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படப் போகும் விபரீதத்தைப் புரிந்து கொள்ளலாம்.

#### அரசின் சதி

எனவே 49 மாநாட்டை நடத்தும் இ. தொ. கா. மிகப் பலம் பெற்றது எனப் பெருமை மட்டும் பாராட்டிக் கொண்டிருந்தால்போட்டித் தொழிற் சங்கங்களினதும், குறிப்பாக அரசின் சதி முயற்சிக்குள்ளும் சிக்கிவிடும் என்பது வெளிப்படையாகும்.

எனவே இவற்றை உரிய முறையில் எதிர்த்துக் குரல் எழுப்புவதுடன் மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் ஆக்கபூர்வமான முறையில் செயற்பட ஈழப்புரட்சி அமைப்பு அறை கூவுகிறது:

அவ்வாறில்லாமல் அரசுக்கு முண்டு கொடுக்கும் சக்தியாக, திகழ்ந்து மலையக மக்களின் நலன்களைப் பலியிட இ. தொ. கா. முனையுமானால் அதனை எதிர்காலச் சந்ததி எள்ளி நகையாடும் என்பதில் ஐயமில்லை என்பதை அறிவுறுத்த விரும்புகிறோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

**பொய்யாமொழி**



குறள்:

உளரெனும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

பொருள்:

கல்லாதவர் உயிரோடிருக்கின்றனர் என்று சொல்லப்படும் [illegible] றும் விளையாத களர் நிலத்திற்கு ஒப்பாவர்.

**வாசகர் திருமுகம்**

## இன்றைய கட்டத்தில் பெற்றோர், மாணவர் செய்ய வேண்டியது என்ன?

யாழ் மாவட்டப் பாடசாலைகளில் இவ்வாரம் மாணவர் வரவு வெகுவாகக் குறைந்துள்ளது. நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு மாணவர் செல்வதற்கு அஞ்சுகிறார்கள். முதலாம் தவணை விடுமுறைக்கு இன்னும் 16 பாடசாலை நாட்களே இருக்கின்றன. ஏப்ரல் 3 ஆம் திகதி முதலாம் தவணை விடுமுறை தினமாகும்.

இலவச பாடநூல்கள் இதுவரை முழுமையாகக் கிடைக்காத போதும் ஆசிரியர்கள் பழைய நூல்களைப் பாடப்புத்தகத்திற்கேற்ப படிப்பித்து வருகிறார்கள்.

சில குறிப்பிட்ட இடங்களில் பாடசாலைகளும் கல்லூரிகளும் இயங்க முடியாமல் இருக்கின்றன. ஒரே மாவட்டத்தில் ஒரு பகுதி மாணவர் படிக்கவும் இன்னொரு பகுதி மாணவர் படிக்க முடியாமல் இருக்கவும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

பயப்பிராந்தியுடன் மாணவர் பாடசாலைகளுக்குச் சென்று படித்துப் பரீட்சை எழுத முடியாதென்பது எவரும் ஏற்றுக் கொள்வர், ஆசிரியர்களும் பாடசாலைக்குச் செல்வதில் பிரயாணக் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இத்தகைய கஷ்டங்களுக்கு மத்தியில் பாடசாலை மாணவரை பணயக் கைதிகளாக்க இருப்பதாக செய்திகள் வெளிவந்தன. இச் செய்தி "கிசு கிசு" எனக் காட்டுத் தீ போல் பரவியது. இந்த வாரம் நகர்ப்புறப் பாடசாலைகளிலும் சரி கிராமப்புற பாடசாலைகளிலும் சரி மாணவர் வரவு குறைந்துவிட்டது.

பெற்றோர் இன்றைய நிலையில் மாணவரைப் பாடசாலைகளுக்கு அனுப்பப் பயப்படுவதில் நியாயமிருக்கின்றது.

இப்படியான நேரங்களில் மாணவர் பெற்றோர் பத்திரிகைச் செய்திகளை நம்பி நடவடிக்கை எடுப்பதை விட ஒரு கூட்டுப் பொறுப்புள்ள ஸ்தாபன ரீதியான அறிக்கையைப் பார்த்து முடிவு செய்வதே சிறந்ததாகும்.

யாழ் மாவட்டத்தில் பெற்றோர் ஆசிரியர் சங்கம், ஆசிரியர் தொழிற் சங்கங்கள், பிரஜைகள் குழுக்கள் எனப் பல்வேறு ஸ்தாபனங்கள் தமிழ் பேசும் மக்களின் அன்றாட நலன்களில் அக்கறையுடன் இருக்கின்றன.

ஒவ்வொன்றும் தனித்தனியான அறிக்கைகளை விட்டு மாணவரையும் பெற்றோரையும் குழப்பாது ஏகமனதாக ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

நாட்டு நிலைமை, இராணுவ எச்சரிக்கை, அரசின் அறிக்கை என்பவற்றை அவ்வப்போது அலசி ஆராய்ந்து மாணவர் செய்ய வேண்டியவற்றைக் கூட்டறிக்கை ஒன்றின் மூலம் செயற்படுத்த வேண்டும்.

யுத்த அபாயம் யாழ்நகரைச் சூழ்ந்துள்ளது என்பதை எவரும் அசட்டை செய்ய முடியாது. இந்த நேரத்தில் மாணவர்களை வழிநடத்த ஆசிரியர் தொழிற்சங்கள், அதிபர் சங்கங்கள், பிரஜைகள் குழுக்கள் ஒன்றிணைந்து நாட்டுநிலைமைக்கேற்ற சில முடிவுகளை எடுத்துச் செயற்படுத்த முன்வர வேண்டும்.

வெறும் வதந்திகளையும், உண்மைக்குப் புறம்பான அறிக்கைகளையும் இவர்கள் எடுக்கும் தீர்மானங்கள் வலுவிழக்கச் செய்துவிடும்.

ஆனைக்கோட்டை — ந. சிவபாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"TOEFL"
வகுப்புகள்
By
S. B. IYAR
சனி / ஞாயிறு 1-30 — 3-30 p m
1. ஒலிப்பதிவு நாடாக்கள்
2. பயிற்சிப் புத்தகங்கள் உதவியுடன்
12, வைமன் வீதி,
நல்லூர்.

உதயன்
12 - 03 - 1987 வியாழக்கிழமை

"TOEFL"
பரீட்சைக்குரிய பயிற்சிப் புத்தகங்கள்
1 SECTION -- III
Reading Comprehension
2. SECTION -- II
Structure and Written Expression
கிடைக்குமிடம்,
S. B. IYAR
12, வைமன் வீதி,
நல்லூர்.

## சென். பற்றிக்ஸ் அணி



இருப்போர் (இடமிருந்து வலம்):-
ஏ. எம். நிமலராஜ். ஆர். எம். ஏ. வின்ஸ்லோ, ஜி. எம். சவரிமுத்து (அணித்தலைவர், இ. ஆர். ஜெயவேந்திரா (உபதலைவர்) பி. ஆதவன், ஏ எச், இரத்தினானந்தன்.
நிற்போர் (இடமிருந்து வலம்):-
ஏ. ஐ லொயலா, வி. ஆர். திலகராஜ். ஆர். பி சௌந்தரநாயகம், எம். ஆர். ஆனந்தராஜா, எம். ஆர். கோகன், பி. டி சி பிரபானந், எம் செந்தூர்வாசன், எம்.பி. பணவீரர், ரி. ஆர், ஜேசுதாஸன்.

## யாழ்ப்பாணக் கல்லூரி அணி



இருப்போர் (இடமிருந்து வலம்)
எஸ்ஜெயராஜன் எஸ் நாபில் சுரேந்திரன், என் நித்தியராஜன் (உபதலைவர்) பி சபந்த ஞமார் (அணித்தலைவர்) ஆர். குலசிங்கம், என். விஜயகுமார், ரி என். ஹர்ஸ்லி.
நிற்போர் (இடமிருந்து வலம்)
எஸ். ஜெயசீலன் எஸ் அமரன் ரேணுர்ஸ் ஆர். தவநிருபன், எம். கிருஷ்ணலிங்கம், என், ரெறன்ஸ்சுதாகரன், ஆர் பிரதீபன், எஸ். பிரேமானந்தன், ஈ. ஐ சுஜிதானந்தன், பி. ஹரிச்சந்திரன்.

# இன்று "பொன் அணிகள் போர்" ('BATTLE OF THE GOLDS')

- விளையாட்டுச் செய்தியாளர் சனி ஜோன்சன் -

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்நகரின் மிகப் பிரபல்யமான கிரிக்கெட் மோதல்களில் ஒன்றான பொன் அணிகள் போர் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் "பிக்னெக்" ஞபகார்த்த விளையாட்டரங்கில் ஆரம்பமாகிறது.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கு மிடையேயான 69 ஆவது வருடாந்த மோதல் இதுவாகும்.

இந்த கிரிக்கெட் பருவ காலத்தில் சென். பற்றிக்ஸ் அணி விளையாடிய 3 ஆட்டங்களில் ஒன்று வெற்றி தோல்வியின்றியும் - 2 போட்டிகள் தோல்வியிலும் முடிவடைந்தன.

யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஆடிய 4 ஆட்டங்களில் இரண்டில் வெற்றியும் இரண்டில் தோல்வியும் அடைந்துள்ளது.

கடந்த காலப் பெறுபேறுகள் எப்படியிருப்பினும் "பொன் அணிகள் போர்" விளையாட்டு எப்படியும் இரு அணிகளுக் கிடையில் பெரும் மோதலாகவே அமையும் என எதிர்பார்க்கலாம்,

இந்த மாபெரும் ஆட்டத்தின் இறுதியில் சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த களத்துறை வீரர், சிறந்த பந்துத் தடுப்பாளர், இந்தப் போட்டியின் சிறந்த ஆட்டக்காரர் ஆகியோருக்கான பரிசுகளுடன் சிறப்பு விருதுகள் இரண்டும் வழங்கப்படும்.

வெற்றி பெறும் அணிக்கு திரு இசற் சிங்கராயரால் அன்பளிப்பு செய்யப்பட்ட வண பிதாலோங் சுற்றுக்கிண்ணம் வழங்கப்படும்,

இந்த ஆட்டத்திற்கு திரு. சி. நந்தகுமார், திரு என். எஸ். சிவஞானசேகரம் ஆகியோர் மத்தியஸ்தம் வகிப்பர்.

யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் பயிற்றுனராக திரு. டி. எம். தம்பிராஜாவும் அணியின் பொறுப்பாசிரியராக திரு. ரி ஆனந்தரட்ணமும் கடமையாற்றுகின்றனர்.

சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியின் பயிற்றுனராக திரு பிரான்சிஸ் சந்தையாவும், அணியின் பொறுப்பாசிரியராக திரு. டபிள்யூ ஜே நவரத்தினமும், விளையாட்டுப் பொறுப்பாசிரியராக திரு எஸ் அல்பேர்ட் சந்தியாப்பிள்ளையும் கடமையாற்றுகின்றனர்.

இன்றைய ஆட்டம் பிற்பகல் 5 மணிக்கு முடிவடைந்து மீண்டும் நாளை காலை 9 மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகும். (உ-7)

# காந்திஜியின் பேத்தி இந்தியா வரத்தடை

டர்பன், மார்ச் 11

மகாத்மா காந்திஜியின் பேத்திக்கு இந்தியாவில் உள்ள தனது சகோதரர் மற்றும் உறவினர்களைச் சென்று பார்க்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

தென் ஆபிரிக்க அரக மகாத்மா காந்திஜியின் பேத்தியானதிருமதிஎராராம்கோபனுக்கு இந்தியா செல்லபாஸ்போட் வழங்க மறுத்துவிட்டது.

தென் ஆபிரிக்காவின் நேட்டல் இந்தியன் காங்கிரஸின் செயற்குழு உறுப்பினராக திருமதி ராம்கோபன் உள்ளார்.

எனது சகோதரர் அருண் காந்தி இந்தியாவில் இருக்கிறார். பத்து ஆண்டுகளாக அவரை நான் சந்திக்கவில்லை.

பம்பாயில் எனது உறவினர்கள் சிலர் நோய் வாய்ப்பட்டிருக்கிறார்கள் அவர்களைச் சென்று பார்க்க விரும்பி பாஸ் போட்டுக்கு விண்ணப்பித்தேன். காரணம் கூறாமல் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது—

இப்படி காந்திஜியின் பேர்த்தி தெரிவித்தார்.

## இராணுவம் வழங்கிய உடுபுடைவை

கிளிநொச்சி, மார்ச் 12

கிளிநொச்சி இராணுவம் 8 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களுக்கு உடுபுடைவைகளை வழங்கியது.

மிகவும் அழுக்கு நிறைந்த கிழிந்த உடைகளை உடுத்து கியூவில் நின்ற மக்களில் பெரும்பாலானவர்கள் மலையக மக்கள் ஆவர். (இ-76)

## டிப்ளோமா கற்கைநெறி மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

திறந்த பல்கலைக்கழக 1987 ஆம் ஆண்டு டிப்ளோமா கற்கை நெறிக்கு பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்காக 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தொழில்நுட்பக்கல்லூரி திறந்த பல்கலைக்கழக பிரதேச அலுவலகத்தில் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு பதிவு செய்யப்பட்டவர்கள் கூட்டத்திற்கு தவறாது சமூகம் அளிக்கும்படி உதவிப் பணிப்பாளர் திரு ந மகாதேவன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-10)

## வரவு குறைகிறது

அச்சுவேலி, மார்ச் 12

அச்சுவேலி ஆவரங்கால், நீர்வேலி, புத்தூர் பகுதி பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவடைந்து வருகிறது

பல்வேறு விதமான வாகனங்களையும் வதந்திகளையும் அடுத்து பாடசாலை மாணவர் வரவு குறைந்து வருவதாகக் கூறப்படுகிறது. (இ-11)

## விசித்திரம்

வாரும் முரளியார்! என்ன வலு ஆறுதலாய் நடந்து வாறீர்? ஆளுக்கு நல்லாய் கேட்டுப் போச்சுது. அடும் சுகவீனம் வந்தவன் மாதிரி இருக்குது, நாள் கு நாள் ஷெல்லடி, ஹெலித்தாக்குதல்களைக் கேட்டு உடம்பு சோர்ந்து போச்சுது போல

சும்மா சொல்லக் கூடாது. வதந்தி உருவாக்கிறதிலையும், பரப்பிறதிலையும் எங்கடை தமிழ் ஆக்களைக் கேட்டுத்தான்!

உதுக்குக்காரணம் அளவுக்கு மிஞ்சின படிப்பு; ஒரு சின்ன விஷயம் கிடைச்சாப் போதும். அதைவைச்சுக் கதைக் கட்டிப் பெரிய ஊகம் ஒண்டைப் போடுவினம் அந்த ஊகத்தை உண்மை மாதிரி நாலுபேரிட்டை கதைச்சுப் பரப்பிப்போடுவினம்.

பள்ளிக்கூடத்திலை என்னவோவாம். ஹெலியிலை இறங்குகினவாம். எத்தனையாமோ திகதி பெரிய தாக்குதலாம் என்றெல்லாம் சொல்லுகினம்... எத்தனையோ வதந்திகள் ஊரிலை உலாவுதுகள் சிலபேர் தங்கடை சில வசதிகளைக் கருதியும் வதந்திகளைப் பரப்பி விடுகினம், ஆனாலை சண்டை கதையளையும் நம்பாதை ஏதோ நடக்கிறதெண்டா நடக்கத்தான் செய்யும், நடவாதது நடவாமல்தான் இருக்கும்.

அரசாங்கமும் அடிச்சுப்பயமுறுத்தித் தன்ரை விஷயத்தை ஒப்பேத்தலாம் எண்டு நினைக்குது.

இஞ்சை நடக்கிறது கொழும்பிலை தெரியாது, கொழும்பிலை நடக்கிறது இஞ்சை தெரியாது என்ட நிலையை வைச்சுத்தான் நினைச்சதைச் செய்யலாம் எண்டு அரசாங்கம் நினைக்குது. ஆனால் கன நாளைக்கு உந்த ஓட்டம் ஓடாது என்டது அதைக்குத் தெரியாமல் இருக்குமே ...

பார்க்கையில்லையே இந்தியாவின்ரை சரியான நெருக்குதல் வாறதுக்கு முன்னம் எரிபொருள் தடையை எடுத்து விடுறதுக்கு ஒரு பிடிகை துடங்கி இருக்கினம்.

எரிபொருள் தடையை நீக்கிறதுக்கு முன்னுக்கு சிங்களச்சனத்தைக் 'கூல்' பண்ண வடக்கு கிழக்கில தேர்தல், அது இது எண்டு ஏதோ தேவையில்லாத வேலை எல்லாம் செய்யப்போகினமாம்

விழுந்தாலும் மீசையில மண் ஒட்டயில்லை எண்டு சொல்லத்தான்!

* * *

அரசாங்கம் மட்டுமா தமிழற்ரை தலையில மிளகாய் அரைக்கப்பாக்குது? தமிழ் ஆக்களிலையே பலபேர் மற்றத் தமிழ் ஆக்களுக்கு மிளகாய் அரைக்கப் பாக்கினம்.

பயண ஆபத்துள்ள இந்த வேளையில முன் கூட்டியே அறிவிச்சுப் போட்டு ஒரு பொம்பிளைப்பிள்ளை கொழும்பிலை உள்ள நிறுவனம் ஒண்டில போட்ட பணத்தை எடுக்கப் போய் இருக்குது.

அங்கை வேலைசெய்யிற தொண்ணூறு சத வீத ஆக்களும் தமிழராம். ஆனால் பிள்ளைக்குக் காசு கிடைக்கயில்லை 'நாளை' பேசினவை கொஞ்சப் பேர். காரணம் சொன்னவை கொஞ்சப்பேர். காலங்கடத்தினவை கொஞ்சப்பேர். நாங்கள் காசை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கிறோம் எண்டு சொல்லி அனுப்பிவிட்டினமாம் காசோ இன்னும் கைக்கு வந்தபாய் இல்லை அவசர காரியத்துக்குக் காசு தேவை. காசு கிடையாததால காரியத்தை ஒத்திப் போடவேண்டிய நிர்ப்பந்தம் எண்டு சொல்லி அழுதிது அந்தப் பிள்ளை!

அந்தக் கொழும்பு நிறுவனத்துக்கு இஞ்சை யாழ்ப்பாணத்திலும் ஒரு தொண்டிக் கிளை இருப்பதாக நண்பர் ஒருவர் சாதிச் போட்டார்! ஐயோ! தமிழினமே!

கொண்டோடி

# பாடசாலை நேரங்களை மாற்றும் அதிகாரம் அதிபரிடம்

கொழும்பு, மார்ச் 12

பாடசாலை ஆரம்பமாகி முடிவடையும் நேரங்களைமாற்றியமைக்கும் அதிகாரம் அதிபர்களுக்கு வழங்கப்படவுள்ளது

அதிபர்களுடன் இது குறித்து ஆலோசனை நடத்தும்படி பிராந்திய கல்விப் பணிப்பாளர்களைக் கல்வி அமைச்சு பணித்துள்ளது.

தற்சமயம் பாடசாலை நேரம் காலை 7-30 மணியில் இருந்து பிற்பகல் 1-30 மணிவரை ஆகும்.

மாணவர்கள் மத்தியில் போஷாக்கு இன்மை ஏற்படுவதற்குக் காரணம் தற்போது பாடசாலை இயங்கும் நேரசூசிதான் என்று கல்வி அமைச்சு கருதுகின்றது

தற்போதுள்ள நேரசூசி காரணமாக பெரும்பாலான மாணவர் காலை உணவைத் தவறவிடுகின்றனர்.

மதிய போசனத்தை உரியநேரத்தில் சாப்பிட முடியாத நிலை மாணவர்களுக்கு ஏற்படுகிறது.

இவற்றை எல்லாம் கருத்திற்கொண்டே பாடசாலை நேரங்களைநிர்ணயிக்கும் அதிகாரம் அதிபர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இப்படிக்கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனிடையில்தினமும் 7 மணித்தியாலங்களுக்கு பாடசாலைகளை இயங்க வைப்பது குறித்து அமைச்சு பரிசீலனை செய்துவருகின்றது.

தற்சமயம் 6 மணித்தியாலங்கள் மட்டுமே பாடசாலை இயங்குகின்றது (உ-ா)

## ஹெலி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நோக்கி தாக்குதல் நடத்துவதன் காரணமாகவே ஹெலிக்கொப்டர் வெவ்வேறு திசைகளில் தரையிறங்குகின்றன

எனினும் அதிகநேரம் முகாமில் தாமதிக்காமல் கொண்டுவரும் பொருட்களை நிலத்தில் பறித்துவிட்டு ஹெலிக்கொப்டர் அவசர அவசரமாக மேலெழுந்து விடுவதாகவும் கூறப்படுகிறது. (உ-10)

## ஆயுதங்களுடன்---

சன்மானமாக வழங்கப்படும்.

* எஸ். எல். ஆர் 7 62 ரைபிள் 25 ஆயிரம் ரூபா,
* ஏ. கே 47 அல்லது அதேரகம் 20 ஆயிரம் ரூபா.
* சப்மெஷின் துப்பாக்கி 20 ஆயிரம் ரூபா.
* கைத்துப்பாக்கி 10 ஆயிரம்ரூபா.
* ரைபிள் 5 ஆயிரம் ரூபா.
* கிறனேட் 1,000 ரூபா.
* 1 கிலோகிராம் வெடி மருந்து 1,000 ரூபா.
* தகவல் தொடர்பு சாதனம் 10 ஆயிரம் ரூபா.

சரணடைபவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படும்; மனிதாபிமான அடிப்படையிலும் நடத்தப்படுவர். (இ-எ)

## கப்பலில்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பல இறக்கப்பட்டு காங்கேசன்துறை ஹாபர் வியூ ஹோட்டலுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

முட்கம்பிகள், கடாரம் அமைக்கும் துணிகள் உணவுப்பண்டங்கள் ஆகியனவும் எடுத்துச் செல்லப்பட்டன

நேற்று முன்தினமும் காங்கேசன்துறைஹாபர் வியூ முகாமில் இருந்து பலாலி முகாமுக்குப் பல இராணுவத் தளபாடப் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டன. இராணுவம் வீதிவழியே படுத்துக் காவல் புரிய முடியவில்லை ... வாகனங்கள் மூலம்இவை எடுத்துசெல்லப்பட்டன.

## உடைமை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கலந்துரையாடினார்கள்.

அவ்வேளையிலேயே இராணுவ அதிகாரிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

இது சம்பந்தமாகக் கலந்தாலோசித்து, வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு பாதிக்கப்பட்டவர்களும் இன்று காலை 10 மணியளவில் ...

பளையில் உள்ள தந்தை செல்வா வித்தியாலயத்தில் கூடும்படி தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபரும், பிரசைகள் குழு அங்கத்தவர்களும் கேட்டுள்ளனர். (உ)

வடக்கின் மிகப் பிரபல்யமான
பாடசாலை கிரிக்கெட் வீரர் தெரிவு
1987
உதயன் நிறுவனத்தின் ஆதரவோடு
யாழ் ஜொலி ஸ்ரார்ஸ் கிங் ஸ்பிரியன்ஸ்
விளையாட்டுக் கழகங்கள் இணைந்து நடத்தும்
மிகப் பிரபல்யமான
கிரிக்கெட் வீரரை வாசகர்கள்
தெரிவு செய்யும் போட்டி

வீரரின் பெயர் ______
கல்லூரி ______
வாக்காளர் பெயர் ______
விலாசம் ______
ஒப்பம் ______

விளம்பரம் செய்ய உதயனை நாடுங்கள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 12 - 03 - 1987 தொலைபேசி இல. 24805 23073

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, PowerHouse Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, Under Number QJ / 94 /N /87. Telephone. 24805, 23073

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org